28th January 1972]

(இ) சாராயம் காய்ச்சும் தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் சாராயத்தில் ஒரு குறிப்பிட்ட விகிதத்தை தொழிற்சாலை, பரிசோதனைக் கூடங்களின் உபயோகத்துக்கென்று ஒதுக்க வேண்டும் என்று தமிழக வர்த்தகக் கழகம் கோரியிருக்கிறது.

(உ) அது அரசின் பரிசீலனையிலுள்ளது.

THIRU G. SWAMINATHAN : Sir, are the Government aware that for want of alcohal, Pharmaceutical industries are starving nowadays?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பொதுவாக மதுவிலக்குக் கொள்கையில் ஏற்பட்ட மாறுதல் காரணமாக சாராயத்திற்கு அதிக வாய்ப்பு இருக்கிறது தமிழ் நாட்டிலே, அதற்குத் தேவையான மோலாசஸ் நாம் கொடுக்க வேண்டும். திடீரென்று ஏற்பட்ட சூழ்நிலையிலே ஓரளவுக்குத் தொழிற்சாலைகளுக்குப் போதுமான அளவு நாம் கொடுக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டாலும், அதற்கான புதிய முயற்சி எடுத்து அண்மையில் உத்தரப் பிரதேசத்திலிருந்து 11 லட்சம் லிட்டர் இதற்காக வாங்கிக்கொடுக்க முன்வந்தோம். இப்போது 2 மிலியன் காலன் உற்பத்தி செய்யுமளவிற்கு கோவை மாவட்டத்தில் ஒரு தொழிற்சாலைக்கு அனுமதி தரப்பட்டிருக்கிறது. அது இன்னும் ஓராண்டில் உற்பத்தி தொடங்கும். அதற்குப் பிறகு பெருமளவில் தர முடியும். கூட்டுறவுத் துறையில் இரண்டு மிலியன் காலன் உற்பத்தி செய்ய முயற்சிக்கிறோம். இப்போது இன்னும் மூன்று கூட்டுறவுத் துறையில் வர இருக்கின்றன. மோலாசஸ் அதிகமாகக் கிடைக்கும்போது இந்தப் பிரச்னை தீர்க்கப்பட்டு விடும்.

THIRU G. SWAMINATHAN : Sir, will the Government consider reducing alcohol for drinking and giving it to industries on a priority basis?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பொதுவாக நம்முடைய அனுபவத்தில் தமிழ் நாட்டில் கூட அந்தப் பழக்கம் அதிகமாக இருப்பதாகத் தெரியவில்லை. முதலிலுள்ள கிராக்கி வரவரக் குறைந்துவருகிறது. சர்க்கார் தலையிடாமலே அந்தப் பிரச்னை தீர்க்கப்பட்டுவிடுமென்று நம்புகிறோம்.

Expenditure on residences, furniture etc.

* 45 *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Public Works be pleased to state the amount spent on the articles of furniture, furnishing materials, renovation, repairs and upkeep of the residences of the Hon. Ministers of the Government during the year 1970–71 ?

மாண்புமிகு அமைச்சர்களின் இருப்பிடங்கள்,
மரச் சாமான்களுக்கான செலவு

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

[28th January 1972

1970-71-ல் மாண்புமிகு அமைச்சர்களின் இருப்பிடங்களுக்கு, மேசை, நாற்காலிகள், அறை அலங்காரப் பொருள்கள், புதுப்பித்தல், பழுது பார்த்தல், பேணுதல் முதலியவை குறித்து அரசு செலவழித்த தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : 1970-71-ஆம் ஆண்டில் தமிழக அமைச்சர்கள் குடியிருக்கும் வீடுகளைப் பாாமரிப்பதற்காகவும், மரச்சாமான்கள், பொருட்கள், திரைச்சீலைகள், வீடுகளைப் புதுப்பித்து பழுது பார்ப்பதற்கும் மொத்தம் ரூபாய் 1,70,874 செலவாகியுள்ளது.

New road along the sea coast

* 46 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether any new road has been laid along the sea coast in Santhome area in Mylapore, Madras; and

(b) if so, the details thereof ?

கடற்கரையை ஒட்டிய புதிய சாலை

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) சென்னை மைலாப்பூர் சாந்தோம் பகுதியின் கடற்கரை நெடுக புதிய சாலை ஏதேனும் போடப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) அகில இந்திய வானொலி நிலையத்தின் எதிரிலுள்ள மெரினு கடற்கரை-முதல், ஓசியானிக் ஓட்டலின் எதிரில் தெற்கு கடற்கரையும் சேரும் இடம் வரையிலும், கடற்கரையை ஒட்டி ரூபாய் 20.85 இலட்சம் செலவில் ஒரு விஸ்தரிப்புச் சாலை போடும் திட்டத்திற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

Celluar concrete plant Ennore

* 47 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(a) whether the cellular concrete plant of the State Housing Board is to be set up at Ennore; and

(b) if so, the details thereof ?

எண்ணூர் புழை கற்கலவை தொழிற்சாலை

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு பிற்பட்ட வகுப்பினர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) எண்ணூரில், மாநில வீட்டு வசதி வாரியத்தின் புழை கற்கலவை தொழிற்சாலை (Cellular Concrete Plant) அமைக்கப்படவிருக்கிறதா?